விருதுநகர் மாவட்டம் , திருச்சுழி ஊராட்சி ஒன்றியம் , ஆலடிப்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில் , இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நவாஸ்கனி முன்னிலையில் நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார் . உடன் திருச்சுழி ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி இருந்தார்.

விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் , ஆமணக்குநத்தம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் , நடைபெற்ற முகாமில், புதிய மின்னணு குடும்ப அட்டைகள் மற்றும் வேளாண்மைத்துறையின் சார்பில் , விவசாயிகளுக்கு நுண்ணூட்ட உரம் , உயிர் உரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் . உடன் முன்னாள் சேர்மன் சுப்பா ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ் ஆகியோர் இருந்தனர்.

நெல்லை அம்பா சமுத்திரம் -

நாங்குநேரி - இராதாபுரம் தொகுதிகளுக்கான பாக முகவர்கள் கூட்டம்!

கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி சிறப்புரை!

நெல்லை, ஜூலை 17-

நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அம்பாசமுத்திரம், நாங்குநேரி, இராதாபுரம், ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான பாக முகவர்கள் கூட்டம் (BLA2) செங்குளத்தில் உள்ள மண்டபத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் கிரகாம் பெல் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ்ராஜன், சிவராஜ், ஜோசப்ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் ஆகியோர் பங்கேற்று 2026 தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினர்.

நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசியதாவது.

தி.மு.க.பல போராட்டங்களைக் கடந்து இந்த நிலைக்கு வந்துள்ளது. டெல்லியில் இருக்கக்கூடியவர் களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும் இயக்கத்தின் தலைவர்களை கொண்டிருக்க கூடிய இயக்கமாக பா.ஜ.க.வின் அடக்கு முறைகளை எதிர்த்து கேள்வி கேட்கக்கூடிய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களை தலைவராக கொண்டுள்ள இயக்கத்தை நாம் பெற்று இருக்கிறோம். இந்த நாடே நம்மை பார்த்து பிரமிக்க கூடிய ஒரு போர் குணத்தோடு தி.மு.க இருந்து கொண்டிருக்கிறது. ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்துடன் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் மொழி சார்ந்த பிரச்சினைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

கீழடி, ஆதிச்சநல்லூர் போன்று தமிழ்நாட்டின் வரலாற்று பெருமைகளை எல்லாம் ஒன்றிய அரசு மறைத்து மறுதலிக்க துணிந்து உள்ளது. அதுமட்டுமல்லாமல் புதிய கல்விக் கொள்கை என்பதைக் கொண்டு வந்து அடக்கிட நினைக்கிறது. ஹிந்தியை கொண்டு வந்து கல்வித்திட்டத்தில் திணித்து நம்முடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைப் கேள்விக்குறியாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டுக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்காமல் இருந்து வருகிறது.

தமிழ்நாடு வளரும் மாநிலமாக மாறிவிடக்கூடாது அதனை முடக்க வேண்டும் என ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால் அத்தனை சவாலையும் தாண்டி ஒரு சிறப்பான ஆட்சியை முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் கொடுத்து வருகிறார்.

அட்மினிஸ்ட்ரேஷன் என்றால் என்ன, ஆட்சி அதிகாரம் என்றால் என்ன என்று தெரியாமல் புதிதாக வந்து எதை வேண்டு மானாலும் பேசி வருபவர்களால் தமிழகத்தில் சிறப்பான ஆட்சி செய்யமுடியாது. அதே நேரத்தில் யார் தமிழ் நாட்டை தமிழ் மக்களை அழித்து விட வேண்டும் என நினைக்கிறார்களோ அவர்களோடு கூட்டணியில் இருக்கக்கூடிய அ.தி.மு.க.போன்ற கட்சிகளை நிச்சயமாக அவர்களுடைய துரோகத்தை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பாக ஓரணியில் தமிழ்நாடு என்பதை பயன்படுத்திட வேண்டும். வாக்காளர் பட்டியலை சரிபார்க்க வேண்டும் என ஒவ்வொரு தேர்தலிலும் சொல்லிக் கொண்டு வருகிறோம். இந்த தேர்தலில் கட்டாயம் வாக்காளர் பட்டியலை சரி பார்க்க வேண்டும்.

பா.ஜ.க.தான் போட்டியிடக்கூடிய ஒவ்வொரு தேர்தலையும் வாக்காளர் பட்டியலில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி பல இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அதற்கு நாம் இடம் கொடுத்து விடக்கூடாது. டெல்லியில் முதலமைச்சர் போட்டியிடும் தொகுதியில் இதனை செய்தார்கள். பீகாரில் தற்போது இந்த குளறுபடியை பா.ஜ.க.செய்து வருகிறது வாக்காளர் பட்டியலில் இருப்பவர்களை சரி பார்க்க வேண்டியது,

இந்த தேர்தலில் கட்டாயம் நியாயமாக நேர்மையாக இந்த தேர்தல் நடத்தப்பட வேண்டும். நமக்கு வாக்களிக்க மக்கள் தயாராக உள்ளனர். அவர்கள் நியாயமாக வாக்களிப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பேசினார்.

அதன் பின்னர் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் அதிக உறுப்பினர்களை சேர்த்த தி.மு.க நிர்வாகிகளை பாராட்டி பரிசு வழங்கி கௌரவித்தார்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், சித்திக், பிரபாகர பாண்டியன், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ்கோஷல், மாவட்ட துணை செயலாளர்கள் நம்பி, தமயந்தி, மைக்கேல், ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துகிருஷ்ணன், வேலங்குளம் கண்ணன், சுடலைக் கண்ணு, சுபாஷ், சுடலை கண்ணன்,

ராஜன், செல்வ கருணாநிதி, ஆரோக்கிய எட்வின் சேவியர் ராஜா ஜோசப் பெல்சி, ஜெகதீஸ், எரிக் ஜூடு, நகர செயலாளர்கள் கணேசன், மணிசூரியன், பேரூர் செயலாளர்கள்

ஜான்கென்னடி, சிந்தாமதார், மணிகண்டன், அணி அமைப்பாளர் கள் ஜான் ரபீந்தர், அலெக்ஸ் அப்பாவு, செல்வ சூடாமணி, ஆண்டனி ஆல்வின் பிரேமா, இசக்கிபாண்டியன், மல்லிகா அருள், பிரேம் ஆனந்த் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் இயங்கும் திருநெல்வேலி விற்பனை குழுவிற்கு உட்பட்ட விளாத்திகுளம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ. 1.60கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1000 மெட்ரிக் டன் சேமிப்பு கிடங்கினை முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட துறை சார்ந்த அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் - கடலூர் மாவட்டம் - சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து

பெருநகர சென்னை மாநகராட்சியில் - 7 வார்டுகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்கள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – தேனாம்பேட்டை மண்டலம் – 114வது வார்டில் நடைபெற்ற முகாமினைப் பார்வையிட்டு – மக்களுடன் கலந்துரையாடினார்!

சென்னை, ஜூலை 17–

முதலமைச்சர் அவர்களால், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று முன்தினம் (15.7.2025) தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் 7 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடினார்.

அதன் விவரம் வருமாறு:–

முதலமைச்சர் அவர்கள், மக்கள் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் நேற்று முன்தினம் (15.07.2025) 7 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டு, ஸ்ரீ மகாவீர் ஜெயின் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடி, பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் மக்கள் வழங்கிய மனுக்களுக்குத் தீர்வுகளை வழங்கினார்.

அடையாறு மண்டலம், வார்டு 168, சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் நடைபெற்ற முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினார்.

வி.க.நகர் மண்டலம், வார்டு76, ஸ்டாரஹன்ஸ் சாலையில் உள்ள வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்குத் தீர்வுகளை வழங்கினார்.

மேலும், மாதவரம் மண்டலம், வார்டு25ல், மாதவரம் தபால் நிலைய சாலையில் உள்ள எம்.ஆர். பேலஸிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு38ல் பட்டேல் நகர் பள்ளியிலும், வளசரவாக்கம் மண்டலத்தில், வார்டு143ல், அம்பத்தூர் இன்டஸ்ரியல் எஸ்டேட், வேலம்மாள் அரங்கிலும், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு109ல், மத்திய பள்ளி சாலையில் உள்ள கில்நகர் விளையாட்டுத் திடலிலும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெற்றது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து வழங்கினர். முகாமிற்கு வருகை தந்த பொது மக்களின் உடல்நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக 15.07.2025 முதல் 14.08. 2025 வரை "உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 109 முகாம்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, த.வேலு, எஸ். சுதர்சனம், ஜோசப் சாமுவேல், ஜெ.ஜெ.எபினேசர், ஆர்.டி.சேகர், கா.கணபதி, டாக்டர் நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ். மதன்மோகன், ஆர். துரைராஜ், திருமதி சரிதா மகேஷ்குமார், எஸ்.நந்தகோபால், நேதாஜி யு.கணேசன், நொளம்பூர் வே. ராஜன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இணை ஆணையர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், துணை ஆணையாளர்கள் பிரதி விராஜ், , கட்டா ரவி தேஜா, , அஃதாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), எச்.ஆர். கௌஷிக், (மத்திய வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

புழல் எம். நாராயணன் தலைமையில்

மாதவரம் 17வது வட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' தீவிர உறுப்பினர் சேர்க்கை !

கே. கருணாகரன் முன்னிலையில் தொகுதிப் பார்வையாளர் டாக்டர் ஜெ. அருண் ஆய்வு

சென்னை, ஜூலை 17-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்று வருகிறது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டத்திற்குட்பட்ட 145, 146 ,147, 164, 165 ஆகிய பாகங்களில் அடங்கிய வடபெரும்பாக்கம், சின்ன தோப்பு, விநாயகபுரம், செட்டிமேடு, வி எஸ் மணி நகர், கொசப்பூர், தியாகி விஸ்வநாததாஸ் நகர், டாக்டர் அம்பேத்கர் நகர், தீயம்பாக்கம், பெரியார் நகர், காந்தி நகர், அரியலூர் ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து இல்லங்களிலும் கழகத்தினர் நேரடியாக சென்று உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில், வட்ட கழக நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி.பாலாஜி, வி. பார்த்தசாரதி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி. வினோத், ஜி. ராஜ்குமார், எஸ். நாகராஜ், பாக முகவர்கள் டி. திவாகர், வி. சுமிர், ஜி.கார்த்திக், எம். மோகன் ராஜ் என்கின்ற மைக்கேல், ஆகியோர் உறுப்பினர் சேர்க்கை முகாமில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வீடு வீடாக கையொப்பம் பெற்று கழகத்தினரையும் புதிதாக இணைபவர்களையும் சேர்த்து வருகிறார்கள்.

இப்பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் மாதவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ. அருண் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு துரிதப்படுத்தினார்.

பாக உறுப்பினர்கள் பூபாலன், இ சுதர்சன் எம். ஜான்சன், எஸ். ஜோசப், அன்பரசு, கொசப்பூர் விஷ்ணு, ராகேஷ், கார்த்திக், கமலநாதன், பி. செந்தில், ராஜாத்தி, சரஸ்வதி, சாந்தி, பார்வதி எம் என். தளபதி, ஜி முனிவேல் உள்ளிட்ட பலர் இப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

17வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் நிர்ணயித்த 30 சதவீதம் வாக்குகளை 5 பாகங்களிலும் பூர்த்தி செய்து, மேலும் உறுப்பினர் சேர்க்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

நிர்ணயத்தை இலக்கை தாண்டி 30 சதவீதத்திற்கும் மேல் உறுப்பினர்களை சேர்த்து வரும் 17 வது வட்ட நிர்வாகிகளுக்கும், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், செயல்வீரர்கள் அனைவருக்கும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தனது வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டார்.

பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி கிழக்கு ஒன்றியம் பாம்பூர் சமுதாயக்கூடத்தில் உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பு திட்ட முகாமினை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார். உடன் வட்டாட்சியர் வரதன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அந்தோணி தாஸ், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.